08-03-2012 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு

தலைப்பு : சிறுவர் மனங்களில் விதைக்கப்படும் ஆணாதிக்கமும் பெண்ணடிமைத்தனமும்

சிறுவர் மனங்களில் ஆணாதிக்கமும் பெண்ணடிமைத்தனமும் உண்மையிலேயே விதைக்கப்படுகிறதா என்ற கேள்வியோடு உரையாடல் தொடங்கியது.

இந்தக்கேள்விக்கு ஆம் என்று பதிலளித்த மனோறா அவர்கள் தனது பதிலை விளக்குகையில், குழந்தை வளர்ப்பின்போதே ஆண்பிள்ளையை ஒரு மாதிரியும் பெண் பிள்ளையை வேறுமாதிரியும் வளர்க்கிறார்கள். ஆண்பிள்ளைகளுக்குக் கிடைக்கும் சலுகைகள் பெண் பிள்ளைகளுக்குக் கிடைப்பதில்லை. வெளிப்படையாகவே அவன் ஆண்பிள்ளை அதனால் இந்தச்சலுகை அவனுக்குக் கிடைக்கிறது என்று பிள்ளைகளிடம் சொல்லத் தயங்காத பெற்றோர் பலர் உளர். பெண்பிள்ளை ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடும்போது கூட நீ பெண் இப்படி எல்லாம் செய்யக்கூடாது என்று தடுக்கும் பெற்றோர் உள்ளனர். பெற்றோரின் இந்தக் கருத்துக்களை உள்வாங்கிக்கொண்ட ஆண்பிள்ளைகள், தாம் ஆண் என்பதால் தமது சகோதரிகள் தமக்குக் கீழானவர்களே என்று நினைக்கத்தொடங்குகிறார்கள், இந்த மனநிலையை வெளிப்படுத்தியவாறு தமது மூத்த சகோதரிகள் மீதே வன்முறையைப் பிரயோகிக்கும் ஆண்பிள்ளைகளையும் நான் பார்த்திருக்கிறேன் என்று கூறினார்.

ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் வேறுவேறான விளையாட்டுப் பொருட்கள் கொடுக்கப்படும் பிரச்சினை பற்றிப் பேசப்பட்டது. இவ்விளையாட்டுப்பொருட்கள் சிறு வயதிலேயே ஆண்பிள்ளைகளதும் பெண் பிள்ளைகளதும் ஆளுமையில் தாக்கம் செலுத்தத் தொடங்கிவிடுகின்றன. பிள்ளைகளுக்கு விளையாடுப் பொருட்களை பெரியவர்கள் தேர்ந்தெடுத்துக்கொடுக்கிறார்கள். விளையாட்டுப் பொருட்கடைக்குக் கூட்டிச்சென்று பிள்ளை விரும்பும் விளையாட்டுப் பொருளை எடுத்துக்கொள்ள அனுமதிக்கும்போது பிள்ளை தனக்குப் பிடித்த ஒன்றைத் தெரிவு செய்து கொள்வது வேறு விடயம். பெரியவர்கள் பெண் பிள்ளைக்கான விளையாட்டுப்பொருள் இதுதான் என்று திட்டமிட்டு வாங்கிக்கொடுக்கும் நிலைதான் தவறானது.

பாடசாலையில் கற்பிக்கப்படும் பாடத்திட்டத்திலும் நூல்களிலும் கூட இவ்வாறான ஆணாதிக்க-பெண்ணடிமைக் கருத்துக்கள் பிள்ளைகள் மனதில் விதைக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக வீட்டுச்சூழலை காண்பிக்கும் படத்தில் அக்கா வீடு கூட்டிக்கொண்டிருப்பவராகவும் அப்பா நாளிதழ் வாசித்துக்கொண்டிருப்பதாகவும் அம்மா சமைப்பதாகவும் தம்பி பந்து விளையாடுவதாகவுமே சித்திரிக்கப்படுகிறது. இது ஆண்-பெண் இடையே உருவாக்கப்பட்டுள்ள மிக மோசமான ஏற்றதாழ்வினை சிறுவர் மனதில் ஆழப் பதிய வைத்துவிடுகிறது.

சிறுவருக்கு வழங்கப்படும் சிறுவர் இலக்கியங்கும் கலை வடிவங்களும் திரைப்படங்களும் கூட இவ்வாறான தீய மனப்பதிவுகளை சிறுவரிடத்தில் ஏற்படுத்தி விடுகிறது. திரைப்படங்கள் வெளிப்படையாகவே ஆணாதிக்கத்தைப் பரப்புவனவாக அமைவதெல்லாம் தீங்கானதாகும்.

சிறுவர்கள் ஏதாவதொரு மதத்தினைக் கேள்விகளற்று நம்பப் பழக்கப்படுகிறார்கள். இதன்காரணமாகப் பொதுவான மதச்சடங்குகள், மதக்கருத்துக்களில் உள்ள ஆணாதிக்க - பெண்ணடிமைக் கூறுகளை அவர்கள் இலகுவாக உள்வாங்கிக்கொள்கிறார்கள்.

சிறுவர், பால்நிலைச் சமத்துவம் தொடர்பான ஆரோக்கியமான சிந்தனைகளோடு வளர்வதற்குப் பெற்றோர் முன்னுதாரணமாக வாழ்வது அவசியமானதாகும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. வீட்டு வேலைகளில் அம்மாவும் அப்பாவும் பங்கெடுத்துக்கொள்வது, விட்டுக்கொடுப்புடன் வாழ்வது, ஒருவரது சுய மதியாதையை மற்றவர் மதித்து வாழ்வது, பிள்ளைகளிடத்தில் ஆண்பெண் வேறுபாடு காட்டாமல் சமமான அக்கறையுடனும் வாய்ப்புக்களுடனும் வளர்ப்பது போன்ற விடயங்கள் சிறுவர் மனங்களை ஆரோக்கியமானதாக மாற்றும் நல்ல முன்னுதாணங்களாக அமையும்.

சமூகத்தில் நிலவும் கருத்துக்களையே கலைவடிவங்களும் பெற்றோரும் வெளிப்படுத்துகின்றனர். அவர்கள் சமூகத்தையே பிரதிபலிக்கின்றனர். எனவே சமூகத்தில் தெளிவான மாற்றங்கள் ஏற்படாதவிடத்து சிறுவரை வளர்க்கும் போது விதைக்கப்படும் பல்வேறு விடயங்களிலும் மாற்றம் ஏற்பட வாய்ப்புக்கள் குறைவு.

சிறுவர் மனங்களிலேயே ஆணாதிக்கமும் பெண்ணடிமைத்தனமும் ஆழமாக விதைக்கப்பட்டுவிடுவதால் அவர்கள் வளர்ந்த பிறகு அவற்றிலிருந்து அவர்களை விடுவிப்பது மிகவும் கடினமான காரியமாக மாறிப்போகிறது. கருத்தளவில் பால்நிலைச் சமத்துவத்தை ஏற்றுக்கொண்டவர்களும் கூட நடைமுறையில் ஆணாதிக்கத்தை வெளிப்படுத்துபவர்களாக ஆகிப்போகும் நிலைக்கும் இதுவே பெரும்பாலும் காரணமாக அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து வரும் தலைப்புக்கள்

இணையத்தில் பணமோசடி செய்யும் தளங்களும் அவை தொழிற்படும் விதமும்

தி. அனோஜன் | 15-03-2012

ஆல்ஃபியோரொவ்

சொரேசு இவானோவிச் ஆல்ஃபியோரொவ் (*Zhores Ivanovich Alferov, உருசியம்: **Жоре́с Ива́нович Алфёров***, பிறப்பு: மார்ச் 15 1930)

புகழ் பெற்ற ஓர் உருசிய இயற்பியலாளர். இவர் 2000 ஆம் ஆண்டிற்கான இயற்பியலுக்கான நோபல் பரிசைப் பெற்றார். இவருடன் இப்பரிசை அவ்வாண்டு பகிர்ந்தவர்கள் அமெரிக்காவின் பேராசிரியர் எர்பெர்ட் குரோமர், மற்றும் சாக் கில்பி ஆகியோர். இம்மூவரும் மின்னணுவியல் துறையில் செய்த ஆய்வுகளுக்காக இப்பரிசு வழங்கப்பட்டது.

சீரொளி என்னும் லேசர் ஒளியை ஆக்க வேறுபட்ட பொருட்களை எவ்வாறு இணைத்து சீரொளி தரும் கருவியைச் செய்யலாம் என அவர்கள் செய்து கண்டுபிடித்த ஆய்வுக்கருத்துக்கள் புகழ் வாய்தவை.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

Facebook group :
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

சமூக விஞ்ஞான கற்கை வட்டம் | செய்திமடல் - 43 | 15-03-2012

மைக்ரோசாஃப்ட்டின் அடிமைகளாக தமிழக மாணவர்களை மாற்றுவதா?

உடன்பாட்டை கைவிட சுதந்திர மென்பொருள் இயக்கம் வலியுறுத்தல்

சென்னை, மார்ச் 14-

மைக்ரோசாஃப்ட் நிறுவ னத்துடன் தமிழக அரசு செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை விலக்கிக்கொள்ள வேண்டும் என்று சுதந்திர மென்பொருள் இயக்கம் கோரியுள்ளது. எதிர் கால தகவல் தொழில்நுட்பத் துறை வல்லுநர்களை உருவாக்கு வதற்கு மாறாக, மைக்ரோ சாஃப்ட் நிறுவனத்தைச் சார்ந் திருக்கும் நிலையையே இந்த உடன்பாடு ஏற்படுத்தும் என்று இந்த இயக்கம் சுட்டிக்காட்டி யுள்ளது.

இது தொடர்பாக இந்திய சுதந்திர மென்பொருள் இயக்கத் தின் (எப்எஸ்எம்ஜ) சார்பில் அதன் பொதுச்செயலாளர் ஒய். கிரண் சந்திரா வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:மைக்ரோசாஃப்ட் நிறுவ னத்தின் தலைவர் ஜீன் பிலிப் கோர்ட்டிஸ், தமிழக முதல மைச்சர் ஜெயலலிதா இருவ ரும் நடத்திய பேச்சுவார்த்தை யைத் தொடர்ந்து அந்த நிறு வனத்திற்கும் அரசுக்கும் இடையே ஒரு உடன்பாடு ஏற்பட்டுள்ளதாக ஊடகங் களில் வந்துள்ள செய்தி நாட் டில் ஜனநாயக எண்ணம் கொண் டோருக்குக் கவலையளிப் பதாகும். இந்தியாவின் பல மாநிலங்கள் தனிப்பட்ட நிறுவ னத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கணினி மென்பொருள் முறை களைக் கைவிட்டு, சுதந்திர மென்பொருள் தயாரிப்புகளுக்கு மாறி வருகின்றன.

ஆனால் தமிழக அரசு மைக்ரோசாஃப்ட் நிறுவனத்துடன் செய்துள்ள உடன்பாடு அந்த நிறுவனம் தமி ழகத்தின் கல்வி, மின்னணு- நிர்வாகம், ஒருங்கிணைந்த கணினி கட்டுப்பாடு ஆகிய துறைகளில் மேற்கொண்டு முதலீடுகள் செய்வதற்கு வழி வகுப்பதாக உள்ளது. இது இந் திய சிந்தனைகளைக் காலனி யாதிக்கத்திற்கு உட்படுத்துவ தாகவும், தனிப்பட்ட உடைமை முறையின் கீழ் அடிமைப்படுத் துவதாகவும் இருக்கிறது.மின்னணு நிர்வாக முறை யில் தனிப்பட்ட நிறுவனத்தின் கட்டுப்பாட்டைக் கொண்டு வருவது, வர்த்தக ரீதியாகக் கட்டுப்பட்டிருக்க இட்டுச் செல்வதோடு, வெளிப்படை யான தரநிலைகள் தொடர்பான இந்தியாவின் கொள்கைக்கு எதிரானதாகும். தனி நிறுவனத் தின் கட்டுப்பாட்டில் அரசு நிர்வாகம் சிக்கிக்கொள்வதைத் தவிர்ப்பதற்காக, பல நாடுகள் ஏற்கெனவே வெளிப்படைத் தரநிலை முறைக்கு மாறிவிட் டன.

மின்னணு நிர்வாகத்தில் தமிழகத்தின் வெற்றிகரமான முன்மாதிரியை மற்ற மாநிலங் களும் பின்பற்ற விரும்பும் நிலை யில், மைக்ரோசாஃப்ட் போன்ற ஒரு நிறுவனத்தின் முதலீடு கள் ஒரு தவறான முன்னு தாரணமாகிவிடும். தமிழ்நாடு மின்னணு கழகம் (எல்காட்) விரிவான முறையில் சுதந்திர மென்பொருள் தயாரிப்புகளைப் பயன்படுத்தி வருகிறது. இது தனிப்பட்ட நிறுவனத்தின் கட்டுப்பாடு சார்ந்த மின்னணு நிர்வாக முறைக்கு சரியான மாற்று சுதந்திர மென்பொருள் தான் என்பதற்கு சரியான சான்றாகும்.சுதந்திர மென்பொருள் களத் தில் எண்ணற்ற மாற்று வழி கள் கிடைக்கவே செய்கின் றன. இந்நிலையில் தனி நிறு வனங்களின் கட்டுப்பாட்டில் கணினி இயக்கங்களை ஒருங் கிணைப்பது என்பது பெருமள வுக்கு தனிமனித சுதந்திரத்தி லும் குறுக்கிடுவதாக இருக் கும். ஆகவே இது ஏற்கத்தக்க தல்ல.தமிழகத்தில் பொறியியல் பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்புகள் கேள்விக் குறியாகி யுள்ளன என்று ஆய்வுகள் காட்டுகின்றன.

இச்சூழலில் கல்வித்துறையில் தனி நிறு வன மென்பொருள் கட்டுப் பாட்டைக் கொண்டுவருகிற போக்கு கவலையளிக்கிறது. மாணவர்களுக்குத் தேவைப் படுவது என்னவென்றால், பல் வேறு மென்பொருள் சோதனை களில் ஈடுபட்டுத் தங்களது சொந்த மென்பொருள்களை உருவாக்க ஊக்குவிக்கும் வகையில், அவர்களை பொறி யியலாளர்களாக நடத்துகிற ஒரு அமைப்புதானேயன்றி, அவர்களை வெறும் பயனாளர் களாக நடத்துகிற அமைப்பு அல்ல. கல்வியின் அனைத்து மட்டங்களிலும் அப்படிப்பட்ட ஆய்வு சார்ந்த மென்பொருள் முறை பரவ வேண்டிய தேவை உள்ளது.ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கிற திட்டத்தில் பங்கேற் கவும் மைக்ரோசாஃப்ட் முன் வந்துள்ளது. இது தனியொரு நிறுவனம் சார்ந்த மென்பொருள் கட்டமைப்பின் பிடியில் சிக் கிய மாணவர்களையே மேலும் மேலும் உருவாக்கும்.ஆகவே, மைக்ரோசாஃப்ட் உடன்பாடு தொடர்பாகத் தமி ழக அரசு தனது நிலைபாட்டை மறுஆய்வு செய்ய வேண்டும், மின்னணு அரசு நிர்வாகம், கல்வி ஆகிய துறைகளில் சுதந் திர மென்பொருளுக்கு இணக் கமான கொள்கையைப் பின் பற்ற வேண்டும் என்று இந்திய சுதந்திர மென்பொருள் இயக் கம் வலியுறுத்துகிறது.

அதுவே தகவல் தொழில்நுட்பத் துறை யில் சாதனைகளைச் செய்யக் கூடிய மாணவர்களை வலு வாக உருவாக்கும், இதில் தமி ழகத்தின் மிகச்சிறப்பான பங் களிப்பை உயர்த்திப் பிடிக்கும்.இவ்வாறு அந்த அறிக் கையில் கூறப்பட்டுள்ளது.

http://www.facebook.com/theekathirasak/posts/2836302187658

இணையத்தில் பணமோசடி செய்யும் தளங்களும் அவை தொழிற்படும் விதமும்

இந்த வாரம் உரையாடப்படவுள்ள தலைப்பு.

1.மோசடி செய்யும் தளங்களின் வகைகள்
2.அங்கு ஏமாறுவோர் யார் யார்?
3.அவை எப்படித் தொழிற்படுகின்றன?
4.அவை எப்படி பாவனையாளர்களை பெறுகின்றனர்?
5.இப்படியான தளங்களின் செயட்படுகளை முன்கூட்டியே கணிக்கும் சில தளங்கள்.
6.அவை எவ்வாறு கணிக்கின்றன
7.இவர்களுக்கிடையிலான தொடர்புகள்.

ஓ 19

பக்தனுக்கு கடவுள் தேவை
அவன் இயலாமையை நிரவ.

பூசாரிக்கு கடவுள் தேவை
அவன் வருமானம் பெருக.

கடவுளின் இருப்புப் பற்றி
பூசாரி நன்கு அறிவான்.

பக்தனை விடவும் அறிவான்

பக்தனுக்கு கடவுள் தேவை
பூசாரிக்கும் கடவுள் தேவை.

இது
கடவுளின் இருப்பு வெளிக்கும் நேரம்.
பூசாரிகளின் பிழைப்புப் பறக்கும்....

ஆனால் பக்தன்..... பாவம்
புதிய புதிய கடவுள்களை எல்லாம்
அவன் கண்டு பிடிப்பான்.

பின்பு.....

புதிய பூசாரிகளும் கூடவே வருவர்.

--
S. கஜேந்திரன்
மார்ச் 14, 2012.

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BY NC SA